# தூதன்

தூதன்-25 நவம்பர் 2016 தூது-10

“நான் கர்த்தருக்குச் செய்த பொருத்தனைகளை அவருடைய ஜனங்களெல்லாருக்கு முன்பாகவும், கர்த்தருடைய ஆலயத்தின் பிரகாரங்களிலும், எருசலேமே உன் நடுவிலும் நிறைவேற்றுவேன்.”
சங்கீதம் 116:18,19



## தென் இந்தியத் திருச்சபை
## தமிழ் சபை - துபாய்

Private Circulation only

# தென் இந்தியத் திருச்சபை
# தமிழ் சபை - துபாய்


| | |
|---|---|
| சபை போதகர் மடல் | 02 |
| ஆயரம்மா மடல் | 05 |
| உதவி போதகர் மடல் | 07 |
| உதவி ஆயரம்மா மடல் | 09 |
| ஆராதனை பாடல்கள் | 11 |
| செயலர் மடல் | 12 |
| பரிசுத்த அறிக்கை | 14 |
| நீங்கள் கிறிஸ்தவரா... | 15 |
| கூழக்கடா | 16 |
| தெரிந்த சத்தியம் தெரியாத உண்மை | 18 |
| திருச்சபை ஜெபநாள் | 20 |
| வேதவினா போட்டி | 22 |
| தெரிந்து கொள்வோம் | 24 |
| Young Readers Column | 26 |
| Health Tips | 28 |
| Children’s Corner | 30 |
| Birthday Celebrants | 32 |
| Wedding Anniversary Celebrants | 35 |



P.O.Box: 8785, Dubai. Ph: 04-2552065, 04-2249249(office), Mob: 050-5533645
Website: www. csitamilparishdubai.com, E-mail: tamilcsi@eim.ae

## அறுவடைப்பண்டிகை (Harvest Festival)

கிறிஸ்துவுக்குள் எனதருமை உடன்விசுவாசிகளே,

தம்மையே காணிக்கையாகத் தந்து நம்மை மீட்டெடுத்த நல்லாயன் இயேசுகிறிஸ்துவின் திருப்பெயரில் வாழ்த்துக்கள். “காணிக்கை” என்ற வார்த்தையை ‘படைத்தல்’ என்று நற்றமிழிலேயும், 'Offertory' என்று ஆங்கிலத்திலேயும் புரிந்துகொள்கிறோம். “படைத்தல்” என்பதிலே படைப்பாளர் என்ற கடவுள் இருக்கிறார். அவரால் படைக்கப்பட்ட படைப்புக்களே நாமும், நம்மைச் சுற்றியுள்ள உயிர்களும். ஆகவே படைப்பாளருக்கு படைப்புக்கள் தம்மையே படைத்துவிடவேண்டும் தொழவேண்டும் ஒப்படைக்கவேண்டும் என்பது தெளிவாகிறது. 'Offer' என்கிற ஆங்கில வார்த்தையில் இரண்டு அடிப்படையான விளக்கங்கள் உள்ளன. பெற்றுக்கொண்டதிலிருந்து கொடுத்தல் (Offer from what is received), தன்னார்வமாகக் கொடுத்தல் (Offer voluntarily). ஆகவே தோத்திரப் பண்டிகை அல்லது அறுவடைப் பண்டிகையைக் கொண்டாடும் இக்காலங்களில் முதலாவது நம்மையும், முதன்மையானதனைத்தையும், தசமபாகத்தையும் படைப்பாளராம் கடவுளுக்குச் செலுத்தி, அவரது திருஉறைவிடமான ஆலயத்திருப்பணிகள் நிறைவேற மன்றாடுவோம்.

### அறுப்பின் பண்டிகையின் தோற்றம் (The origin of the Harvest Festival) :

நாடோடிக் குடும்பமாய் வாழ்ந்த முற்பிதாக்களான ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு காலங்களில் எபிரேய மக்களுக்கு அறுக்கிறதற்கும், அறுப்பதை அனுபவிப்பதற்கும் வாய்ப்புகள் குறைவே! ஆடு மாடுகளை மேய்த்து அதன் வழியே பிழைத்து வந்தனர். இருப்பினும் அவைகளில் சிறப்பானதை ஆண்டவருக்குக் காணிக்கையாகப் படைத்தனர். உயிர்ப்பலிகளோடு தமக்கென்று இருந்த சிறு விளைச்சலின் முதன்மைப் பகுதியையும் கடவுளுக்குக் காணிக்கையாக்கினர் (உதாரணம் :ஆபேல்). இடப்பெயர்ச்சி செய்து வாழ்ந்த கூட்டமாக இருந்தபடியால் விவசாயம், விளைச்சல், அறுவடை என்பது எபிரேயர்கள் வாழ்வில் அதிகமாய்க் காணப்படவில்லை. கால்நடை மேய்ப்பிடமே பிரதானமாயிருந்தது (ஆதி.13:7-13). எகிப்தின் வாழ்விற்குள் யோசேப்பின் காலத்தில் நுழைந்தபோது நைல் நதியையும், அதன் முகத்துவாரத்தையும் ஒட்டிய மிகச்சிறப்பான நிலத்தையும், பயிர்களின் விளைச்சல்களையும் கண்டனர். முதல் முற்பிதாவான ஆபிரகாமுக்கு இறைவன் அளித்த வாக்குறுதிகளை என்றும் மறவாமல் நினைவுகூர்ந்திருந்தனர் (ஆதி.13:14-18,15:1-21,17:1-8).

எகிப்தின் அடிமைத் தனத்தினின்று விடுவித்து மீண்டும் ஆண்டவர் வாக்குப்பண்ணின கானான் நாட்டைச் சுதந்தரித்த காலத்திலேதான் சொந்த நிலம், அதிலே விவசாயம், அதன் விளைச்சல்கள் போன்ற அனுபவங்கள், ஆசீர்வாதங்கள் தோன்றின. ஆனால், இவைகளைக் கொடுப்பதற்கு முன்பாகவே ஆண்டவர் அறுப்புக்கால பண்டிகையைப் பற்றியும், இறைவனுக்குச் செலுத்த வேண்டிய நேர்ச்சைகளைப் பற்றியும் எடுத்துரைத்திருந்தார்.

## அறுப்பின் பண்டிகை வளர்ச்சி (Development of the Harvest Festival) :

பத்திலொரு பாகத்தைக் கொடுக்கவேண்டும் என்பது முற்பிதாக்கள் காலந்தொட்டே இருந்து வருகிறது. உடன்பிறந்த சகோதரனுக்கு மூத்தவன் தசமபாகத்தைக் கொடுக்கும் பழக்கத்தை ஆபிரகாம் வாழ்விலே காண்கிறோம் (ஆதி.14:20). அதுபோலவே ஆண்டவர் தந்த ஆசீர்வாதங்களில் தசமபாகத்தைத் திரும்பக் கொடுக்க வாக்குறுதி தரும் யாக்கோபையும் காண்கிறோம் (ஆதி.28:22). ஆகவே அறுவடைப் பலனைக் கொடுக்கும் முன்பாகவே, ஆண்டவர் மோசேக்கும், அவரது மக்களுக்கும் கட்டளையாகச் சுட்டிக்காட்டுகின்ற, நினைப்பூட்டுகின்ற காணிக்கையே அறுப்பின் பண்டிகையின் ஆரம்பமாக விளங்கிற்று. ஐந்தாகம நூல்களில் இப்பண்டிகைக் காணிக்கைகளைக் குறித்து விரிவாகக் காணமுடிகிறது. நிலத்திற்கும், எளியவர்களுக்கும் நீதி செய்யவேண்டும் (யாத்.23:10-15, லேவி.23:15-22) வயலின் முதற்பலனை அறுப்பின் பண்டிகையாகவும், வயலிலிருந்து உழைப்பின் பலனைச் சேர்க்கும்போது சேர்ப்பின் பண்டிகையாகவும் கொண்டாடவேண்டும் (யாத்.23:16). அதுமட்டுமின்றி ஆண்டவரது கோவிலுக்குரிய காணிக்கைகளையும் தன்னார்வத்துடனும், நன்றியுடனும், தெய்வ பக்தியுடனும் செலுத்தவேண்டும் (யாத்.25:1-8) எனவும் ஆண்டவர் கட்டளை கொடுக்கிறார். அதுபோலவே ஆசாரிப்புக்கூடாரத்திற்காக மக்கள் அதன் தேவைக்கும் மிஞ்சிக் கொடுத்தனர் (யாத். 36:2-7). கானானுக்குள் மக்கள் பிரவேசித்து விளைச்சல்களை அனுபவிக்கும்போது தானியப்படையல்கள் காணிக்கை (லேவி.2, 6:14-17), உயிர்ப்பலி காணிக்கை (லேவி.3-5) போன்ற இருவகையான காணிக்கைகளையும் பக்தியுடன் ஒழுங்குடன் படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். யோசியா அரசனின் காலத்தில் நாடு திரும்பவும் அந்நிய தெய்வ வழிபாடுகள் மற்றும் சுயநல செழுமை முறைகளிலிருந்து தூய்மைப்படுத்தப்பட்ட காலத்தில் ஆசீர்வாதங்களை அளித்துக் காப்பாற்றிய ஆண்டவரை மறவாமலும் (உபா.8:7-18), தன்னார்வமாகவும், எளியவர் அனைவருடன் இணைந்தும் அறுப்பின் பண்டிகையைக் கொண்டாடி ஒரே குடும்பமாய், ஏற்றத்தாழ்வின்றி மகிழவும், நன்றி சொல்லவும் அறிவுறுத்தப்பட்டனர் (உபா.16:9-12). முந்தைய வாழ்வை மறந்துவிடாமலும், அதை வழிநடத்தி உயர்த்திய ஆண்டவருக்குமுன் தாழ்த்தியும் அறுவடைக் காணிக்கைகளைச் செலுத்த அழைக்கப்பட்டனர் (உபா.26:1-15).

ஆனால் இறைவனுடைய கட்டளைகளை மக்கள் மீறி சுய செழுமைக்கும், சுயநலத்திற்கும் தம்மை ஈடுபடுத்தி, ஏழைகளை ஒரு ஜோடி செருப்புக்கு விற்று, தசமபாகத்தை உதாசீனம் செய்து, பண்டிகைகளைச் சடங்குகளாகக் கொண்டாடிய நிலை கர்த்தரால் எச்சரிக்கப்பட்டது (மல்கியா 3:6-12). நிலமும், அதன் வளமும் அழிக்கப்படுவதற்கு மக்களின் பாவங்களே காரணம் என்று சுட்டிக்காட்டப்பட்டது. மக்கள் மனம் திரும்பி இறைவனிடம் திரும்பவும், இறைவனின் ஆலயத்தை மீண்டும் எழுப்பி, இறைபக்தியை மீண்டும் பெற்றுக்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டனர். பாபிலோன் சிறையிருப்பிலிருந்து திரும்பவும் வந்த இஸ்ராயேல் மக்கள் 50-ம் நாள் (பெந்தேகொஸ்தே) அறுவடைப் பண்டிகையைத் தொடர்ந்து கொண்டாடினர். பண்டிகைகளைக் கொண்டாட ஆண்டவர் இயேசுவும் தவறாது எருசலேம் சென்றார். ஆனால் அவைகளைப் பொருளுள்ள வகையில் கொண்டாட மக்களை அறிவுறுத்தினர். பெற்றோரைக் கைவிட்டுப் படைக்கப்படும் கொர்பான் காணிக்கையையும் (மத்.15:5), சகோதரனுடன் நல்லுறவின்றி பலிபீடத்தில் படைக்கப்படும் காணிக்கையையும் (மத்.5:23,24), செல்வத்திரட்சியிலிருந்து பெருமையாய் செய்யப்படும் காணிக்கைகளையும் ஆண்டவர் அருவருக்கிறார். மாறாகத் தன்னையே காணிக்கையாய்ப் படைத்தலையும் (லூக்கா 21:4), கடவுளுடையதைக் கடவுளுக்குக் கொடுத்தலையும் (மத்தேயு 22:21) அவர் மெச்சுகின்றார்.

தோத்திரப்பண்டிகையைக் கொண்டாடும் இறைமக்களாகிய நாமும் முதலாவது நம்மையும், பிறகு நல்லுறவுடன் கூடிய ஒப்புரவாகுதலுடன் நமது காணிக்கைகளையும், தசமபாகமாகவும், முதன்மையானதாகவும் ஆண்டவருக்கென்றும், ஆலயத்தின் திருப்பணிகளுக்கென்றும் படைப்போம்! கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

கொடுப்பவர் பெருகுவார்! சேர்ப்பவர் உருகுவார்!

இறைப்பணியில் ஆயர்,
அருள்திரு. சே.கிறிஸ்தோபர் ரத்தினசாமி.

## NEW ARRIVALS

"பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம்"

Jaren Moses
S/o.Mr.John Jenkins & Mrs. Caroline Jenkins
27-09-2016

Oliver
S/o. Mr.John Michael Earnest & Mrs.Lincy John Michael
29-09-2016

## எளிய பெண்ணின் அரிய காணிக்கை
Rich Giving of A Poor Woman (Lu.21:1-4, Mk.12:41-44)

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,

தம்மையே ஜீவபலியாகத் தந்த ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் நாமத்திலே புதிய மாதத்தின் நல்வாழ்த்துக்களையும், வருகையின் கால வரவேற்பையும் உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். இம்மாதமும் நமக்கு ஒரு விசேஷமான மாதமே! கர்த்தர் நமக்குச் செய்த நன்மைகளை நினைத்து, நன்றி செலுத்தி, சிறப்பானதைக் கொடுக்கும் பண்டிகையின் மாதம். நாம் ஏன் கொடுக்கவேண்டும்? இந்த தேசத்திலும் நம்மை அழைத்துவந்து, தனிநபர்களாய், குடும்பங்களாய் நல் உழைப்பையும், வாழ்வையும் ஆசீர்வதித்ததற்கும், ஆண்டவரின் எண்ணற்ற கிருபைகளுக்காகவும், இரக்கங்களுக்காகவும், அன்புக்காகவும் நன்றி செலுத்தி காணிக்கைகளைச் செலுத்தவேண்டும். "என் கை சாமர்த்தியமும், என் கை பெலனும் இதைச் செய்தது என்று நீ உன் இருதயத்திலே சொல்லிக் கொள்ளாமலும் இருக்க எச்சரிக்கையாயிருந்து, உன் கர்த்தரை நினைப்பாயாக" (உபா.8:17,18) என்ற வேத வார்த்தையின்படி, நாம் பெற்றிருக்கிற எந்த ஆசீர்வாதமும் கர்த்தரால் நமக்கு இலவசமாகக் கொடுக்கப்பட்டதே!

### 1. தியாகத்தின் காணிக்கை (Sacrificial Giving) :
இரண்டு காசுகள் காணிக்கை செலுத்தி, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக ஈகைக்கான உதாரணமாகப் பேசப்படுகிற ஏழைவிதவையைக் குறித்துப் பார்ப்போம். பஸ்கா வாரத்தின்போது பெண்களும் தேவாலயத்திலே, தங்களுக்குரிய இடங்களிலே உள்ள காணிக்கைப் பெட்டிகளில் காணிக்கைகளைப் போடுவார்கள். தேவாலய ஊழியங்களுக்காக இவைகள் உட்பட்ட எல்லாக் காணிக்கைகளும் பயன்படுத்தப்படும். அதுமட்டுமின்றி மக்கள் தங்கள் உடைமைகளை காணிக்கைகளாகப் போடுவதற்கான பெரிய காணிக்கைப் பெட்டிகள் தேவாலய முற்றத்தின் சுவர்களுக்கு அருகில் வைக்கப்பட்டிருக்கும். ஐசுவரியவான்கள் மக்கள் பார்க்கும்படியாகவும், அநேகருக்குத் தெரியும்படியாகவும் விலையுயர்ந்த காணிக்கைகளைப் போடுவார்கள். இம்முறை ஆண்டவர் இயேசுவும் அதைக் கவனிக்கிறார். ஆனால் ஒரு ஏழைவிதவை தன் குடும்ப வாழ்வுக்காக வைத்திருந்த இரண்டு காசுகளையும் பக்தியோடும், பணிவோடும், தியாகத்தோடும் போடுவதையும் கவனிக்கிறார். "அவள் மற்றெல்லாரைப் பார்க்கிலும் அதிகமாய்ப் போட்டாள்" என்று பாராட்டுகிறார். செல்வந்தர்கள் மற்றும் சுயநலமான பரிசேயர், வேதபாரகரைப் பார்க்கிலும் (மாற்கு 10:24, யாக்கோபு 2:5) தியாகத்துடன் தன்னுடைய ஏழ்மையிலும் இரண்டு

காசுகளைப் போட்ட இந்தக் கைம்பெண்ணின் காணிக்கை ஏற்றுக்கொள்ளப்படுகிறது. பெயர் குறிப்பிடப்படாத இப்பெண்ணின் மிகச்சிறிய காணிக்கை, மிகப்பெரியதாய் ஆண்டவரால் பேசப்படுவதற்குக் காரணம் தியாகமாகும் (Sacrificial giving is more valued and accepted than fancy and costly giving).

**2. ஏற்புடைய காணிக்கை (Acceptable Offering) :**
கைவிடப்பட்ட அபலைகளையும், கைம்பெண்களையும் காண்கிற கர்த்தர் நம்முடைய கர்த்தர். அதை ஆகாருடைய ஜெபத்தில் காணலாம் (ஆதி.16:13). ஆகவே இந்த ஏழை விதவையும் தனக்குரியதையெல்லாம் காணிக்கையாகப் போட்டதை ஆண்டவர் காண்கிறார். எல்லாவற்றையும் தூரத்திலிருந்தே அறிகிறார் ஆண்டவர். இயேசுவின் பார்வையில் இப்பெண் செய்தது ஏற்றுக்கொள்ளக்கூடிய தெய்வீக காணிக்கையாகும். கர்த்தரை மறந்து, செழிப்பை வழிபட்டு வாழ்ந்து வந்த இஸ்ரவேலரின் காணிக்கைகளைக் கர்த்தர் அருவருக்கிறார். (மல்கியா 1:10). அதே சமயம் தியாகத்தோடும், பக்தியோடும், நன்றியோடும், உண்மையோடும் செலுத்தப்படும் காணிக்கைகளை ஆண்டவர் ஏற்றுக்கொள்கிறார். அவள் போட்ட காணிக்கை மக்கள் கண்களுக்கு மிகவும் சாதாரணமான அல்லது ஒன்றுமில்லாத காணிக்கையாகும். ஆனால் அவரது மனதின் உண்மை ஆண்டவருக்குத் தெரிந்திருந்ததால் பெரிதும் அங்கீகரிக்கப்பட்டதாகும்.

**3. மனப்பூர்வக் காணிக்கை (Voluntry Offertory) :**
செல்வந்தர்கள் மக்கள் பார்க்கும்படியாகவும், பாராட்டுகளைப் பெறும்படியாகவும், உலகத்தின் பார்வையிலே பெரிய காணிக்கைகளைப் போட்டிருந்தார்கள். ஆனால் கடவுளை அவர்களால் ஏமாற்ற முடியாது. இந்த ஏழை விதவை தன் ஜீவனத்துக்கு உண்டானவைகளையெல்லாம் போட்டபடியினாலும், அதைத் தன்னை வருத்தி தன்னார்வத்தோடு தந்தபடியினாலும், “இவள் மற்றெல்லாரைப் பார்க்கிலும் அதிமாய்ப் போட்டாள்” என்று ஆண்டவர் இயேசு பாராட்டுவதன் மூலம் செல்வந்தர்கள் பரலோக ராஜ்ஜியத்தில் பிரவேசிப்பது ஏன் அரிது என்பதையும், ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள், பரலோக ராஜ்ஜியம் அவர்களுடையது என்பதையும் தெளிவுபடுத்துகிறார்.

ஆகவே கர்த்தருக்குப் படைக்கும் காணிக்கைகளை நன்றியோடும், தியாகத்தோடும், உண்மையோடும், தன்னார்வத்தோடும் படைத்து இந்த ஏழை விதவையைப்போல, மக்கதொனியா திருச்சபையைப்போல சாட்சி பகர்வோம்.

திருச்சபை ஊழியங்களுக்காகத் தசமபாகத்தையும், முதன்மையானவை களையும் படைத்து இறைஆசி பெறுவோம். தோத்திரப் பண்டிகைக்காக ஜெபிப்போம். இணைந்து கொண்டாடுவோம்.

இறைப்பணியில்,
திருமதி. தீபா கிறிஸ்தோபர்,
ஆயரம்மா, பெண்கள் ஐக்கிய சங்கத்தலைவி.

## வாக்குத்தத்த செய்தி

உம்முடைய இரட்சணியத்தை என் கண்கள் கண்டது. லூக்கா 2:32

நம்மை இப்பொழுது இருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தினின்று விடுவிக்கும்படி நம்முடைய பிதாவாகிய தேவனுடைய சித்தத்தின்படியே நம்முடைய பாவங்களுக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவகுமாரனாம் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள்.

கடந்த நாட்களில் நம்மைக் கண்மணிபோல் கருத்துடன் காத்து இப்புதிய மாதத்தைக் காணச்செய்த அவருடைய கிருபை பெரியது. இம்மாதத்தில் ஆண்டவர் நமக்குத்தரும் அருள்வாக்கு : உம்முடைய இரட்சணியத்தை என் கண்கள் கண்டது (லூக்கா 2:32). இந்த வசனத்தில் ‘இரட்சணியம்’ என்பது இயேசு கிறிஸ்துவைக் குறிக்கிறது. தம்முடைய குமாரன் மூலமாக பிதாவானவர் பூமியிலே செய்யப்போகிற அவருடைய மீட்பின் கிரியை, பிசாசின் கிரியைகளை அழித்தல், பாவத்திலிருந்து, வியாதியிலிருந்து விடுதலை போன்றவற்றையே இரட்சணியம் என சிமியோன் சொல்கிறான். சிமியோனுக்கு இந்த இரட்சணியம், அவனுடைய கண்கள் கண்டதாக, தன் கைக்கு வாய்த்ததாகக் கூறுகிறான். நம் வாழ்விலும் இந்த இரட்சணியத்தின் மகத்துவம் விளங்க நாம் என்ன செய்யவேண்டும் என்பதை இம்மாதத்தில் தியானிப்போம்.

### 1.தேவாலயத்தை மையப்படுத்துங்கள் (Church centered life):

சிமியோனின் வாழ்வு தேவாலயத்தில் தங்கியிருந்து ஜெபித்து ஆலயத்தை நேசிக்கிற ஒரு வாழ்வு (லூக்கா 2:25). அங்கேதான் இரட்சகரைக் காண்கிறான். நாம் இரட்சிப்பைக் காணும் இடம் தேவாலயம். தேவன் தம்முடைய மகிமையை, இரட்சணியத்தை ஆலயத்தில் ஜெபிக்கும்போது வெளிப்படுத்துகிறார். அன்னாள் துக்கத்தை மாற்றின இடம் தேவாலயம். ஏசாயா தீர்க்கதரிசி தேவனுடைய மகத்துவத்தைக் கண்ட இடம் தேவாலயம். சங்கீதக்காரன் தேவாலயத்தின் வாசற்படியில் காத்திருப்பதை நாடுகிறான். சிமியோன் (வச.25b) இஸ்ரவேலின் ஆறுதலுக்கு தேவாலயத்தில் ஜெபித்துக் கொண்டிருந்தான், காத்துக் கொண்டிருந்தான். அந்த ஆறுதலை அவன் கண்கள் கண்டது, அவன் கைகளுக்கு வாய்த்தது.

நம்முடைய வாழ்விலும் நாம் எதற்குக் காத்துக்கொண்டிருக்கிறோமோ, அதை தேவன் இந்த மாதம் பெற்றுக்கொள்ளும்படி அருள் செய்வாராக.

**2. வாக்குத்தத்தத்தை மையப்படுத்துங்கள் (Promise centered life):**

சிமியோனின் வாழ்வு வாக்குத்தத்தத்தை நம்பி வாழ்ந்த வாழ்வு (வச. 26a). அவனுக்கு ஆண்டவர் சொன்ன வாக்குத்தத்தத்தை முன்வைத்து எதிர்பார்த்து தேவன் சொன்னதை நிறைவேற்ற வல்லவர் என்பதை விசுவாசித்து வாழ்ந்தவன். அது அவன் வாழ்வில் நிறைவேறினதைப் பார்க்கிறோம். அந்த இரட்சணியத்தை அவன் கண்கள் கண்டது.

பிதாவினால் இயேசுகிறிஸ்து நமக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவர் என்பதை மறக்கக்கூடாது. அவருக்குள், வாக்குத்தத்தத்துக்குள், சகல பரிபூரணமும், ஐஸ்வரியமும், கனமும், மகிமையும், ஆம் என்றும், ஆமென் என்றும் உண்டாயிருக்கிறது. கர்த்தருடைய வார்த்தையை நம்பியே வாழ்வில் பயணிக்க அழைக்கப்படுகிறோம். ஆபிரகாம் வார்த்தையை நம்பிப்போனான். வாக்குத்தத்தம் பண்ணினதைப் பெற்றான் (ஈசாக்கு), வாக்குப் பண்ணினதைச் சுதந்தரித்தான் (கானான்).

நாமும் இந்த மாதத்தில் அவரையும், அவருடைய வாக்குத்தத்தத்தையும் பற்றிக்கொண்டு சார்ந்து விசுவாசித்து வாழும்போது இரட்சணியத்தைக் கண்கள் காணும், கைகளுக்கு அது வாய்க்கும்.

**3. ஆவியானவரை மையப்படுத்துங்கள் (Spirit centerd life) வசனம் 27:**

சிமியோனிடம் ஒரு அனுபவம் இருந்தது. அவன் ஆவியின் ஏவுதலைப் பெற்றிருந்த மனிதன். அந்த உணர்வுதான் நம்மை இயேசுவுக்கு நேராக வழிநடத்தும் (27b). கிறிஸ்துவின் இரட்சணியத்தை, தேவன் ஆயத்தம் பண்ணின (வசனம் 31) அந்த இரட்சிப்பைக் கண் கண்டது.

தேவன் நமக்கு சகலவற்றையும் ஆயத்தம் செய்து முன்குறித்து வைத்திருக்கிறார். அதைப் பரிசுத்த ஆவியானவரின் துணையோடு, அவர் தரும் ஆற்றலோடு சுதந்தரித்துக் கொள்ளமுடியும்.

எல்லாவற்றுக்கும் மேலாக வாழ்வின் பூரண அறிக்கையை அனுபவமாக்கிக் கொள்ளமுடியும். சமாதானத்தோடே உம்மிடம் வந்து இளைப்பாறுவேன் என்று சொல்கிறான் (வசனம் 29).

இந்த மாதத்தில் நம்வாழ்வில் அவருடைய இரட்சணியத்தை கண்கள் காணவும், கைகளுக்கு அது வாய்க்கவும் ஆலயத்தை மையப்படுத்துவோம், வாக்குத்தத்தத்தை மையப்படுத்துவோம், ஆவியானவரை மையப்படுத்துவோம். கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

உங்களுக்காக ஜெபிக்கும்,
அருள்திரு. ஆல்வின் பிரைட்.
உதவி போதகர்.

இயேசுகிறிஸ்துவின் இனிதான நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்.

## சிந்திக்க ஒரு சிறுகதை

காலை நேரம் பள்ளிக்குப் புறப்படுவதற்கு முன்பாக விமலி வேதாகமத்தை வாசித்துக்கொண்டிருந்தாள். திடீரென்று எழுந்த அவள், அம்மாவிடம் ஓடிவந்தாள். "அம்மா, பரலோகத்தில் உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள்" என்று இயேசு சுவாமி சொல்லியிருக்கிறாரே? பொக்கிஷம் என்றால் புதையல்தானே? அதை எப்படி பரலோகத்தில் சேர்த்து வைக்க முடியும்? என்று விமலி கேட்டாள்.

"பரலோகத்தில் நாம் எதைச் சேர்த்துவைக்க முடியும்? முத்தையும், பொன்னையும் அல்ல. வேதாகமத்திலுள்ள கட்டளைகளுக்கு, குறிப்பாக இயேசு சாமியின் கட்டளைகளுக்கு நாம் கீழ்ப்படியும்போது, பரலோகத்தில் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கிறோம்" என்று அம்மா பொறுமையாய் பதிலளித்தார்கள். நானும் சேர்த்துவைக்க முடியுமா? என விமலி கேட்டாள்.

முடியுமே, வேதாகமத்தை வாசிக்கும்போது, எத்தனை கட்டளைகளைப் பார்க்கிறாய். Junior Church-ல் படித்திருக்கிறாய். எடுத்துக்காட்டாக, "ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்" என இயேசு சுவாமி யோவான் 13:34 வசனத்தில் சொல்லியிருக்கிறார் அல்லவா? என அம்மா ஆலோசனை கூறினார்கள். அம்மாவிடம் விடைபெற்று புறப்பட்டாள் விமலி. அவள் 6-ம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தாள்.

தன்னுடைய வகுப்புக்குச் செல்லும் வழியில் 3-ம் வகுப்பு படிக்கும் லீனா அழுதுகொண்டிருந்தாள். அவள் கையில் முனை ஒடிந்துபோன ஒரு பென்சில்! என்னம்மா, பென்சில் ஒடிந்துவிட்டதா? உன்னிடம் Sharpner இல்லையோ? என அன்போடு கேட்ட விமலி தன் Sharpner எடுத்து Pencil-ஐச் சீவினாள்.

"இதோ பென்சில், இனி உடையாமல் பத்திரமாக வைத்துக்கொள்" என்றாள் விமலி. நான் உடைக்கவில்லை, அந்த பிரியாதான் உடைத்தாள் என மற்றொரு மாணவியைச் சுட்டிக்காட்டினாள். பிரியா ஒளிந்துகொள்ள முயன்றாள். "பயப்படாதே, இங்கே வா" என கூப்பிட்டாள் விமலி. நாம் "ஒருவரோடொருவர் சண்டை போடக்கூடாது. அன்பாக நடக்கவேண்டும்" என்ற விமலி தன் பையிலிருந்து ஆளுக்கொரு Galaxy chocolate கொடுத்தாள். இனி சண்டை போடமாட்டோம் என இருவரும் கூறினார்கள்.

விமலி தன் வகுப்புக்கு விரைந்தாள். எப்போதும் தன்னோடு சண்டை போட்டுக்கொண்டிருக்கும் நவமணியின் நினைவு அவளுக்கு வந்தது. இன்னைக்கு என்ன செய்யப்போகிறாளோ? என நினைத்தபடி வகுப்பறைக்குள் நுழைந்தாள். ஆனால் அங்கே நவமணி வரவில்லை. அவள் தெருவில் இருக்கும் மரியாவிடம் கேட்டாள் விமலி. நவமணிக்கு Fever, இன்னைக்கு வரமாட்டாள் என மரியா பதிலளித்தாள்.

விமலி தலைகுனிந்தபடியே, ஆண்டவரே, நவமணிக்கு நல்ல சுகத்தைத் தாரும். நாளைக்கு அவள் பள்ளிக்கு வர உதவி செய்யும் என ஜெபித்தாள். அன்று மாலை வீட்டுக்குச் சென்றவுடன் அம்மாவிடம் நடந்ததைத் தெரிவித்தாள்.

Very Good. முதல் நாளிலேயே 2 பொக்கிஷத்தைச் சேர்த்துவிட்டாயே! லீனாவிடம் அன்பு காட்டியிருக்கிறாய். மத்தேயு 5:44-ல் இயேசு சொல்லியிருப்பது போல உன்னைத் துன்புறுத்திய நவமணிக்காக ஜெபித்திருக்கிறாய். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! என அம்மா பாராட்டினார்கள். நாளைக்கு இதைவிட அதிகமான பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டும் என விமலி தீர்மானித்தாள்.

வேதவாசிப்புப் பகுதி : மத்தேயு 6:20-24

மனப்பாட வசனம் : மத்தேயு 6:20

உங்களுக்காக ஜெபிக்கும்
திருமதி.ஜெனி.ஃபர் ஆல்வின்
உதவி ஆயரம்மா.

## வேத வகுப்பு ஆராய்ச்சி

முதலாம், மூன்றாம் மற்றும் ஐந்தாம் புதன் கிழமைகளில் இரவு 8:00 மணிக்கு போதகர் இல்லத்தில் நடைபெறும்

## ஆங்கில ஆராதனை

முதல் மற்றும் மூன்றாம் வாரம் வெள்ளிக்கிழமை தோறும் காலை 6:00 மணி முதல் 7:15 மணி வரை திருவிருந்து ஆராதனை ஆங்கிலத்தில் நடைபெறும்.

## பாமாலை - கீர்த்தனை

ஆராதனை ஆரம்ப கவி : பாமாலை 15 கவி 1

ஆராதனை இறுதி கவி : கீர்த்தனை 32 மங்களம் சதா

### 04-11-2016

| | | |
|---|---|---|
| பாமாலை | 43 | விண்ணோர்கள் போற்றும் ஆண்டவா |
| பாமாலை | 179 | பயத்தோடும் பக்தியோடும் |
| கீர்த்தனை | 187 | கர்த்தரின் பந்தியில் வா |
| கீர்த்தனை | 17 | தோத்திரம் செய்வேனே |
| கீர்த்தனை | 92 | உன்றன் சுயமதியே |

### 11-11-2016

| | | |
|---|---|---|
| பாமாலை | 1 | அநாதியான கர்த்தரே |
| பாமாலை | 100 | பாவீ கேள் உன் ஆண்டவர் |
| பாமாலை | 156 | காலந்தோறும் தயவாக |
| கீர்த்தனை | 160 | உந்தன் சித்தம் போல |
| கீர்த்தனை | 161 | என்னை ஜீவபலியாய் |
| கீர்த்தனை | 162 | ஐயா உமது சித்தம் |

### 18-11-2016

| | | |
|---|---|---|
| பாமாலை | 4 | ஆத்மமே உன் ஆண்டவரின் |
| பாமாலை | 201 | சத்திய வேதமான விதை |
| கீர்த்தனை | 172 | சுந்தரப் பரம தேவ மைந்தன் |
| கீர்த்தனை | 173 | தந்தானைத் துதிப்போமே |
| கீர்த்தனை | 174 | தாசரே இத்தரணியை அன்பாய் |

### 25-11-2016

| | | |
|---|---|---|
| பாமாலை | 2 | அலங்கார வாசலாலே |
| பாமாலை | 137 | எந்தன் ஜீவன் இயேசுவே |
| பாமாலை | 86 | பாவிக்காய் மரித்த இயேசு |
| கீர்த்தனை | 156 | என்ன என் ஆனந்தம் |
| கீர்த்தனை | 144 | தேவனே நான் உமதண்டையில் |
| கீர்த்தனை | 56 | இயேசுவின் நாமமே |

கர்த்தருடைய பெரிதான கிருபையால் 10 மாதங்களைக் கடந்து 11வது மாதத்தைக் காணச்செய்த கர்த்தருக்கு கோடானுகோடி நன்றிகளை ஏறெடுக்கிறேன். 07-10-2016 அன்று உடல் மனதளவில் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு இறைவேண்டல் ஏறெடுக்கப்பட்டது. 14-10-2016 அன்று வாலிபர் திருநாள் வெகு சிறப்பாக நடந்தது. Youth சகோதர சகோதரிகள் மிகவும் உற்சாகமாக கலந்து பாடல்களை பாடி மகிழ்வித்தனர். அன்றைய தினம் Youth retreat-ம் நடந்தது. செய்தியை Luthern Church Bishop Rt. Rev. Martin அவர்கள் பகிர்ந்து கொண்டார்கள். மிகவும் ஆசீர்வாதமாக இருந்தது. அன்றைய தினமே நமது கிளை ஆலயம் இராஸ் அல் கைமாவில் Harvest Festival நடந்தது. பங்கேற்ற அனைவருக்கும் நன்றி கூறுகிறேன்.

Harvest Festival-க்கு Prayer Cell மூலமாக படைத்த உணவு பண்டங்களைக் கொடுத்து உதவிய யாவருக்கும் நன்றி கூறுகிறேன். இந்த மாதம் நடைபெற இருக்கும் Harvest Festival-க்கு யாவரும் தங்களால் இயன்ற அளவு ஆலயத்திற்கு பொருட்களாகவோ, பணமாகவோ படைத்து சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன்.

சிங் ரெத்னம், செயலர்.

## திருமறைப் பாட ஒழுங்குகள் - நவம்பர் 2016

| நாள் | தியானப் பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்தி பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 04-11-2016 | உம்மிடம் வாங்கி உமக்கே கொடுக்கிறோம் | லேவி. 23:15-22 | அப்போ. 5:32-37 | மத்தேயு 17:24-27 | 148 |
| 11-11-2016 | கிறிஸ்தவ ஈகை | 1 நாளாகமம் 29:1-9 | 2கொரிந். 8:1-9 | லூக்கா 20:45-21:4 | 98 |
| 18-11-2016 ஸ்தோத்திரப் பண்டிகை | நன்றியுடன் கொண்டாடு | உபாகமம் 26:1-15 | எபேசியர் 5:1-5 | மத்தேயு 25:14-30 | 116:12-19 |
| 25-11-2016 வருகையின் திருநாள் | இறை வாக்கை கொண்டாடுதல் | 1 சாமுவேல் 2:1-10 | எபிரெயர் 11:29-40 | லூக்கா 1:39-45 | 66 |

# தென் இந்தியத் திருச்சபை
# தமிழ் சபை - துபாய்

## வருடாந்திர நற்செய்தி கூட்டங்கள் 2016



நாள் : நவம்பர் 28, 29, 30
இடம் : தூய திரித்துவ ஆலய வளாகம்

### சிறப்பு செய்தியாளர்
## Freddy Joseph

### நிகழ்ச்சி நிரல்

துபாய்

| | | | |
|---|---|---|---|
| 28-11-2016 | : | இரவு 8:00 - 10:00 மணி | C1 Hall |
| 29-11-2016 | : | இரவு 8:00 - 10:00 மணி | திரித்துவ ஆலயம் |
| 30-11-2016 | : | இரவு 8:00 - 10:00 மணி | C1 Hall |

நாள் : 01-12-2016 வியாழக்கிழமை
நேரம் : மாலை 7:30 மணி முதல் இரவு 9:00 மணி வரை
இடம் : ஃபுஜைரா ஆலயம்

நாள் : 02-12-2016 வெள்ளிக்கிழமை
நேரம் : காலை 11:00 மணி Teens & Senior தியான முகாம்
இடம் : ஆயர் இல்லம், துபாய்

நாள் : 02-12-2016 வெள்ளிக்கிழமை
நேரம் : மாலை 7:30 மணி முதல் இரவு 9:00 மணி வரை
இடம் : பரி. லூக்கா ஆலயம், இராஸ் அல் கைமா

நாள் : 03-12-2016 சனிக்கிழமை (தியான முகாம்)
நேரம் : காலை 11:00 மணி முதல் இரவு 3:30 மணி வரை
இடம் : தூய திரித்துவ ஆலயம், துபாய்

உங்களை அன்புடன் அழைக்கின்றோம்
ஜெபியுங்கள்! பங்கு பெறுங்கள்!! ஆசீர்வாதம் பெறுங்கள்!!!

# பரிசுத்த அறிக்கை

மாசுபட்ட மனதில்கெட்ட
துாசுதட்ட, இரக்கப்பட்ட
தேவன்சற்றே இறக்கிவிட்ட
துாதன்வந்தான் துாதுதந்தான்

உறங்கிக்கிடந்த யோசேப்பின்
உள்ளக்கதவைத் தட்டுகிறான்
இருண்டுகிடந்த இதயத்துள்ளே
தேவப்பிரகாசம் ததும்பவிட்டான்

மரியாளும் அறியாளாய்
தெரிந்துகொண்டார் தேவத்தாயாய்
பாரிலேயே பரிசுத்தத்தை
நேரிலேயே ஓர்அறிக்கையாய்

தூய்மைகாத்து மேன்மைசேத்து
தாய்மைகாத்து யோசேப்பு
ஆயமட்டும் நேயக்காப்பு
வயப்பட்டான் தயக்கம்விட்டு

ஈராயிறத்து பதினாறாண்டு
ஒன்பதுமாத முன்ஓர்இறவு
ஊர்உறங்குது உலகுறங்குது
தேவப்பிரசன்ன திவ்யஉறவு !

ஆதாரம் : மத்தேயு 1:20-23, லூக்கா 1:26-38

கவிதை எண் : 192

கவிதை ஆக்கம் : மணிமுத்து

# நீங்கள் கிறிஸ்தவரா...

நீ நேர்ந்து கொண்டதைச் செய்யாமற் போவதைப் பார்க்கிலும், நேர்ந்துகொள்ளாதிருப்பதே நலம். பிரசங்கி 5:5

பாரினில்
பக்தர்கள்
பலவகை
கர்த்தரை
பயபக்தியுடன்
பணிந்து
வழிபடுபவர்
பலர்...
சிலர்...
களங்கமிலா
பக்தியறியார்
பலனை
எதிர்பார்த்து
பக்தி கொள்ள
முன்வருவார்
பல கோரிக்கைகள்
வைத்து
ஜெபம் செய்வார்
பலன்
கிடைத்ததும்
பலகாலம்
மறந்திடுவார்.
கர்த்தரே
எனக்காக
இந்தக்
காரியத்தை
செய்துதாருங்கள்
அப்பா - சுவாமி
காணிக்கையாக
இவ்வளவு
தருவேன் என்று
பேரம் பேசும்
பக்தர்கள்...
பாவக்கறை
படிந்த பணத்தை...
காணிக்கையாகத்
தரும்

பக்தருக்கு
பலனேது..
'ஒரு ஏழையான
விதவை வந்து
இரண்டு காசை
காணிக்கையாகப்
போட்டாள்
இயேசு பார்த்து
இதையே பெரிதென
சொன்னார்.'
மாற்கு 12:41-44
படிக்கவும்
அடுக்கடுக்காய்
படும் பாட்டிலிருந்து
கருணை கொண்டு
கரையேற்றிய
கர்த்தரை வேண்டி
யாராயினும்
நேர்ந்து
கொண்டது
எதுவாயினும்
செய்யாமற்
போனால்
பின் விளைவுகள்
உண்டாகும்
நட்டாற்றில்
விட்டுவிடும் - பின்
கரையேறுவது
கடினமே.
வாயைக் கொடுத்து
வாங்கி
கட்டிக் கொள்ள
வேண்டுமா
அவலென்று
நினைத்து-வெறும்
உரலை
இடிக்கலாமா

இயலாததை
இயம்பாதே..
நேர்ந்து கொள்வதை
விட
நேர்ந்து
கொள்ளாதிருப்பதே
நலம்.
எதுவாயினும்
கர்த்தரே
நமக்குத் தருகிறார்.
மறவாதே
கர்த்தரின் கஜானா
நம்மால்
நிறைவது அல்ல
அது அள்ள அள்ளக்
குறையாதது
என்றுமே
நிறைவானது
நாம் எவ்வளவு
காணிக்கை
கொடுக்கிறோம்
என்பது
முக்கியமல்ல.
நம் இதயம்
இறைவன் வந்து
கோயில் கொள்ள
சுத்தமாக
தூய்மையாக
மாசு மருவில்லாமல்
இருக்கிறதா
என்பதுதான்
முக்கியம்.
"கர்த்தர் மேல்
ஆழ்ந்த பக்தி
அதுவே
வாழ்வின்
வெற்றி."

என்றும் அன்புடன், T. ராஜ்குமார். Mens Fellowship.

## கூழக்கடா

கூழக்கடாக்கள் பறக்கும் பறவைகளில் மிகப் பெரிய நீர்ப் பறவை. இப்பறவைகளை வேடந்தாங்கல் பகுதிகளில் மத்தாளிக் கொக்கு என்று அழைக்கின்றனர். எபிரேய மொழியில் இதற்கு வாந்திப் பண்ணுகிறவன் என்று பொருள். லேவி.11:18-இல் மக்கள் உண்ணக்கூடாத, அருவருக்கத்தக்க பறவை இது ஆகும். இதனுடைய அலகுகள் நீண்டு அகலமாக இருக்கும். அலகுகளின் கீழ் தொங்கும் பை போன்ற பெரிய தாடை கொண்டது. இதன் முக்கிய உணவு மீன்களாகும். கிடைக்கும் மீன்களை அவசரமாகப் பிடித்து தன் அலகு பைக்குள் நிரப்பிக் கொள்ளும். தன் கூட இரை தேடும் நீர்ப் பறவைகள் ஒவ்வொரு மீனாக ஆர அமரப் பிடித்துத் தின்னும் பொழுது இந்த கூழக்கடா அடங்கா ஆர்வத்துடனும், பேராசையுடனும் மீனைப் பிடித்து தன் அலகுப் பையில் நிரப்பிக் கொள்கிறது. சுயநலமிக்க இந்த கூழக்கடாவைப் போல் கிடைத்ததை முடிந்த மட்டும் சுருட்டும் சுயநலக்காரர்களை நம் சமுதாயத்தில் காணமுடிகிறது. இதனைக் குறித்து இயேசு நாதர் ஒரு உவமையை அவர்களுக்குச் சொன்னார்: “ஐசுவரியமுள்ள ஒருவனுடைய நிலம் நன்றாய் விளைந்தது. அப்பொழுது அவன்: நான் என்ன செய்வேன்? என் தானியங்களைச் சேர்த்து வைக்கிறதற்கு இடமில்லையே, நான் ஒன்று செய்வேன், என் களஞ்சியங்களை இடித்து, பெரிதாகக் கட்டி, எனக்கு விளைந்த தானியத்தையும் என் பொருள்களையும் அங்கே சேர்த்து வைத்து, பின்பு: ஆத்துமாவே, உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேகம் பொருள்கள் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது, நீ இளைப்பாறி, புசித்துக் குடித்து, பூரிப்பாயிரு என்று என் ஆத்துமாவோடே சொல்லுவேன் என்று தனக்குள்ளே சிந்தித்துச் சொல்லிக்கொண்டான். தேவனோ அவனை நோக்கி: மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக் கொள்ளப்படும், அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும் என்றார். தேவனிடத்தில் ஐசுவரியவானாயிராமல், தனக்காகவே பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கிறவன் இப்படியே இருக்கிறான் என்றார்”( லூக்கா 12:15-21). ஐசுவரியத்தைச் சம்பாதிப்பதற்கு அவர் பெலனைத் தரும் போது நாம் சுயநலமாக சேர்த்து வைப்பதைத் தவிர்த்து, தேவையிலுள்ள மற்றவர்களுக்குக் கொடுத்து, நம் பொக்கிஷத்தை பரலோகத்தில் சேர்த்து வைக்க வேண்டும். மற்றவர்களுடைய பிரயோஜனத்துக்காக நாம் செலவழிக்கும் போது நம் பாடுகள் வீணாவதில்லை. மாறாக பரலோகத்தில் நம் பொருள் சேர்த்து வைக்கப்படும்.

"பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கவேண்டாம், இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும், இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள்: பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள், அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை, அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை." (மத் 6:19,20). இயேசு ஒருபோதும் பணம் சம்பாதிப்பதையோ, சேமிப்பதையோ குறை கூறவில்லை. ஆனால் அளவுக்கு அதிகமாக சேர்த்து வைப்பதையே குற்றம் என்கிறார். மேலும் மேலும் வேண்டும் என்று இச்சிப்பது மன நிறைவைக் கொடுக்காது. அதற்கு முடிவே இருக்காது. பேராசை பெருநஷ்டம், போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து என்பதெல்லாம் வழக்கு. நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிற ஆசீர்வாத அளவிற்குத் தக்கதாக, நாம் கொடுத்துக் கொண்டே இருப்போம். "கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும், அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள், நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் என்றார்"(லூக்கா 6:38). மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கவே கர்த்தர் நம்மை ஆசீர்வதித்திருப்பதினால் நம் உதாரத்துவத்தினால் கர்த்தரை நாம் மகிழ்ச்சியாக்குவோம். "உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை, இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டு போவதுமில்லை என்பது நிச்சயம்" (1 தீமோ 6:7). ஆம், கர்த்தர் தரும் செல்வம் எனக்காக என சுயநலத்துடன் பிடித்து வைக்காமல் தேவையிலுள்ள தரித்திரருக்கும், ஆண்டவரின் அன்பை மற்றவர்களுக்கு எடுத்துக் கூறும் ஊழியப் பணிகளுக்கும் கொடுத்து அவரது அன்பை மற்றவர்களுக்குக் காண்பிக்க கர்த்தர் கிருபை செய்வாராக.

ஜீவன் சுகத்துடனே - இருக்கையில் ஆவலா யிப்பொழுதே
தேவலோகத்திலே ஜீவப் பொக்கிஷத்தைச்
சேர்த்திடுவோர் மெத்தப் பாக்கியவான்களே
பொக்கிஷம் சேர்த்திடுங்கள் - பரத்திலே

இனிதா மோசஸ்

## HARVEST FESTIVAL - 2016

### WEEKLY FOOD SALES

| Date | Sponsoring group |
|---|---|
| 04-11-2016 | Qusais - B Prayercell |
| 11-11-2016 | Junior Church |
| **18-11-2016** | **Harvest Festival - Dubai** |

## ஆபிரகாம் - ஈசாக்கு!!!

ஆபிரகாம் சாராளிடம் வந்து “நம் குமாரன் ஈசாக்கு வளர்ந்து விட்டான். ஆனால் அவன் கர்த்தரை சேவிப்பது எப்படி என்று படிக்கவில்லை. ஆகவே நான் அவனை நோவாவின் குமாரனாகிய சேமிடமும் அவன் குமாரனாகிய ஏபேரிடமும் அழைத்துச் செல்வேன். அங்கே கர்த்தருடைய வழிகளை அறிந்து கொள்வான். ஏனெனில் அவர்கள் அவனுக்குத் தொடர்ந்து கர்த்தரை நோக்கி ஜெபிப்பதால் அவர் நிச்சயம் பதிலளிப்பார் எனவும் போதிப்பார்கள். ஆகவே கர்த்தரைச் சேவிப்பது எப்படி என அறிந்து கொள்வான்” என்றார்.

சாராள் ஆபிரகாமை நோக்கி “நன்றாக கூறினீர்கள் ஆண்டவனே! நீங்கள் அவனை அழைத்துச் சென்று தாங்கள் கூறியவாறு நடப்பியுங்கள் ஆயினும் அவனை வெகு தொலைவிற்கோ அல்லது வெகு நாட்களுக்கோ பிரித்துச் சென்றுவிடாதீர்கள். ஏனெனில் எனது ஆத்துமா அவனுடைய ஆத்துமாவோடே கட்டப்பட்டுள்ளது” என்றாள். ஆபிரகாம் சாராளிடம், “நல்லது, நாம் ஆண்டவரிடம் மன்றாடுவோம். அவர் நமக்கு நன்மையானதைக் கட்டளையிடுவாராக” என்றார்.

சாராள் ஈசாக்கிடம் இரவுமுழுவதும் அறிவுரைகள் வழங்கி, முத்தமிட்டு, கட்டித்தழுவி, “மகனே, என் ஆத்துமா எப்படி உன்னைவிட்டு பிரிந்திருக்கும்?” என்றாள். பின்பு ஆபிரகாமிடம், “ஆண்டவனே, தங்களுடைய கண்களைவிட்டு இவனை பிரிக்காதேயும் என்று மன்றாடுகின்றேன். ஏனெனில் எனக்கு இவனைத் தவிர வேறொரு மகனோ, மகளோ இல்லை. இவனைக் கைவிட்டு விடாதேயும். இவன் பசியாயிருந்தால் அப்பம் கொடும். தாகமாயிருந்தால் தண்ணீர் கொடும். இவனை வெறுங்காலோடே தரையில் நடக்கவோ, சூரியனுக்கடியில் உட்காரவோ விடாதேயும். இவனை எதிலும் வற்புறுத்தாதேயும். இவனை இவன் விருப்பத்தின்படி கவனித்துக்கொள்ளும்” என்றாள்.

இரவுமுழுவதும் ஈசாக்கினிமித்தம் சாராள் மிகவும் அழுதபடியும், காலை வரை அறிவுரைகள் கூறிய வண்ணம் இருந்தாள். காலையில் சாராள் தன்னிடத்திலுள்ள (ராஜாவாகிய அபிமெலேக்கு பரிசளித்த) மிகவும் அழகான ஒப்பற்ற ஆடையைக் கொண்டுவந்து ஈசாக்கிற்குக் கொடுத்து, அவனை உடுத்துவித்தாள். தலையில் அழகிய தலைப்பாகையை அணிவித்து அதின்மேலே விலையுயர்ந்த கல்லைப் பதியச்செய்தாள். பின்பு ஈசாக்கின் கரங்களைப் பிடித்துக் கொண்டு கட்டித்தழுவி, “யாருக்குத் தெரியும், இனி என்றைக்கு நான் உன்னை மறுபடியும் காண்பேன் என்று?” மிகவும் அழுதாள்.

சாராளோடு, ஆபிரகாம், ஈசாக்கு, மற்றும் அவர்களுடைய வேலைக்காரர் அனைவரும் அழுதனர். அவர்களுடைய வழிக்கெல்லாம் ஆகாரம் கொடுத்து ஆபிரகாமோடு ஈசாக்கை, தன்னுடைய வேலைக்காரர்கூட அனுப்பி வைத்ததுடன், கண்ணுக்கு எட்டும் தூரம்வரை அவர்கள் செல்வதைப் பார்த்துக்கொண்டு நின்றாள். பின்பு தன்னுடைய கூடாரத்தை அணுகினாள்.

ஆபிரகாமோ, கர்த்தரின் கட்டளைப்படி ஈசாக்கை பலியிடும்படிக்கு அழைத்துச்சென்றான். ஆபிரகாம் தன்னுடைய மகனாகிய இஸ்மவேலையும், வீட்டு விசாரணைக் கர்த்தனாகிய எலியேசரையும் உடன் அழைத்துச் சென்றார். வழியில் நடந்து செல்கையில் இஸ்மவேல் எலியேசரிடம், "எனது தகப்பனார் ஆண்டவரின் கட்டளைப்படி ஈசாக்கை தகனபலியாக தகனிக்கப் போகிறார். பின்பு திரும்பி வந்து தன்னுடைய எல்லா செல்வத்தையும் முதற்பேரான எனக்குத் தருவார்" என்றான். அதற்கு எலியேசர் "கண்டிப்பாக ஆபிரகாம் உன்னையும் உன் தாயாரையும் துரத்திவிட்டு உனக்கு சுதந்தரம் கிடைக்காதபடி செய்வார். அவர் தம்முடைய ஆஸ்தி முழுவதையும் இரவும் பகலும் அவருக்காக உழைத்த வீட்டிலுள்ள ஒரே விசுவாசமான வேலைக்காரனாகிய எனக்கு தந்தருளுவார்" என்றார்.

ஆபிரகாமும் ஈசாக்கும் முன்னே நடந்து செல்கையில் சாத்தான் ஒரு வயதான மனிதனின் உருவத்தில் ஆபிரகாமிடம் வந்து, "உம்முடைய ஒரே மகனை இப்படி செய்ய உமக்கு அறிவில்லையா? வயதான காலத்தில் தேவன் தந்த மகனை பலியிடச் செய்வதன்மூலம் உம்முடைய ஆத்துமாவை பூமியிலிருந்து அழிந்து போக பண்ணுவீரே! இந்த காரியம் நிச்சயமாக கர்த்தரிடமிருந்து வந்திருக்காது! ஏனெனில் கர்த்தர் எப்படி மனுபுத்திரனை நோக்கி உன்னுடைய மகனைக் கொலை செய் என்று கூறுவார்?" என்றான். இதைக் கேட்ட ஆபிரகாம் தன்னை கர்த்தருடைய வழியிலிருந்து வழி தவறிச்செல்ல செய்யும் சாத்தானுடைய வார்த்தை என்பதைப் புரிந்து கொண்டார். எனவே ஆபிரகாம் அவனை அதட்ட, சாத்தான் அவரைவிட்டு ஓடிப்போய், ஈசாக்கிடம் ஒரு வாலிபனின் உருவில் சென்று "உம்முடைய தகப்பனார் உம்மை கொலைசெய்யும்படியாக அழைத்துச் செல்வது உமக்குத் தெரியுமா? இந்த வயதான தகப்பனாருடைய சத்தத்தை கேட்காதேயும். உம்முடைய அழகான ரூபமும், உம்முடைய அழகான சரீரமும் இப்பூமியிலிருந்து அழிந்துபோக விடாதேயும்" என்றான். ஈசாக்கு தன் தகப்பனாரை நோக்கி, "இவன் சொல்வதைக் கேட்டீர்களா?" என்றான். ஆபிரகாம் ஈசாக்கிடம் "மகனே நீ அவனுக்குச் செவிக்கொடுக்காதே. அவன் சாத்தான்" என்று கூறிவிட்டு மறுபடியும் அவனை அதட்ட அவன் அவர்களை விட்டு வேகமாகச் சென்றான்.

பின்பு ... நடந்ததென்ன? தொடரும்...

நன்றி: யாசேரின் புத்தகம் தமிழாக்கம் & தொகுப்பு: ஷீபா ரெஜினால்ட்

"கர்த்தாவே, உமக்குக் காத்திருக்கிறேன், என் தேவனாகிய ஆண்டவரே, நீர் மறுஉத்தரவு கொடுப்பீர்." சங்கீதம் 38:15

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, "திருச்சபை ஜெபநாளில்" பங்கு பெற்றுத் தொடர்ந்து ஜெபித்துவரும் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினர்களுக்கும், சபையின் சார்பில் நன்றி கூறுகின்றோம். தொடர்ந்து மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும், ஜெபக் குழுக்களிலும், மற்றும் தினந்தோறும் ஜெப நேரம் ஒதுக்கி, ஜெபித்துத் திருச்சபைத் திருப்பணிகளைத் தாங்குங்கள். தேவ ஆசீர்வாதம் உங்களோடிருப்பதாக.

## துதிகள்

- இம்மட்டும் நம்மைப் பாதுகாத்து, பராமரித்து இப்புதிய ஆண்டைக் காணச்செய்த தேவனுக்கு நன்றி ஏறெடுப்போம். கர்த்தர் நமக்குத் தந்தருளிய சரீர சுகம், பெலம், ஜீவனுக்காக அவரைத் துதிப்போம்.
- திருச்சபை மூலமாக நாம் இம்மட்டும் பெற்றுக்கொண்ட ஐக்கியம் மற்றும் ஆன்மீக நன்மைகளுக்காக நன்றி கூறுவோம்.
- தேவன் நம் ஜெபத்தைக் கேட்டு நம் மத்தியில் பிரசன்னராயிருந்து, நம்மைத் தாங்கி பெலப்படுத்தியமைக்காக ஸ்தோத்திரம் கூறவோம்.
- Youth Fellowship special service, Retreat மற்றும் இராஸ் அல் கைமா கிளைச்சபையின் ஸ்தோத்திரப்பண்டிகை ஆராதனை யாவும் சிறப்பாக நடந்தேற கர்த்தர் பாராட்டின தயவுகளுக்காக அவரைத் துதிப்போம்.

## திருச்சபை திருப்பணிகளுக்கான ஜெப வேண்டுதல்கள்

- நம் குருவானவர்கள், சபை ஊழியர், மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்காக, திருப்பணிகளுக்காக,
- நம் திருச்சபையின் முன்னாள் குருவானவர்கள், அவர்கள் குடும்பத்தாருக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும்,
- நம் திருச்சபைகளைச் சேர்ந்த திருச்சபையினர் அனைவருக்காகவும், ஆங்காங்கே நடைபெறும் ஆராதனைகள், ஊழியங்கள், சிறுவர், வாலிபர், ஆண்கள், பெண்கள் மத்தியில் நடைபெறும் சிறப்பு ஊழியங்கள் மற்றும் முகாம் ஊழியங்களுக்காக,
- திருச்சபை மக்களுடைய நல்லுறவு பெலப்பட ஏதுவான நம் ஆன்மீக வளர்ச்சிக்காக,
- திருச்சபையின் நிர்வாகக்குழு அங்கத்தினர்களுக்காகவும், தேவ சித்தம் நிறைவேற்றும் வகையில் அவர் தம் பணிகளுக்காகவும்,
